
# இலங்கை நூலகச்சங்கம் செய்திமடல்

தொகுதி 37 இல. 04 ஏப்ரல் -யூன் 2021 ISSN 1391 -2531

## அரசு நூலகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த / வரையறுக்கப்பட்ட போட்டித் தேர்வு 2021 நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர்

இலங்கை நூலக சங்கத்தின் அரசு நூலகக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆன்லைன் கருத்தரங்குகள் தொடர் 2021 மார்ச் 27 முதல் 2021 ஜூன் 24 வரை வார இறுதிகளில் நடைபெற்றது. திறந்த / வரையறுக்கப்பட்ட போட்டித் தேர்வில் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ள வேட்பாளர்களுக்காக இந்த தொடர் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த வெற்றிகரமான கருத்தரங்குகள் விண்ணப்பதாரர்களின் வேண்டுகோளின் பேரில் ஆன்லைனில் 8 நாட்கள் நடத்தப்பட்டன. விரிவுரைகளுக்கான வளவாளர்களாக டாக்டர் ருவன் கமகே, டாக்டர்.ஆர். டி.ஆனந்தா திசா, டாக்டர்.கே. ஆர்.என். ஹர்ஷனி மற்றும் மிஸ் கே.என். சமந்தி அதிகபட்ச அர்ப்பணிப்புடன் ஈடுபட்டனர். இந்த தொடர்




(https://governmentlibraysrilanka.blogspot.com/)

கருத்தரங்குகளில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் "அரசு நூலகர் தேர்வு" என்ற ஒரு வாட்ஸ்அப் குழு அமைக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் அனைத்து விரிவுரைகள் பற்றிய வீடியோக்களும் விரிவுரைகளும் பெறப்படலாம். மேலும், இந்த தொடர் கருத்தரங்குகளுக்கு இணையாக, "இலங்கையில் உள்ள அரசு நூலகங்கள் குழு" என்ற வலைப்பதிவை அரசு நூலகக் குழுவின் கன்வீனர் திருமதி எம். கே. ஜி. யானிகா நந்தசேனா தொடங்கினார். அனைத்து பயனர்களும் இந்த வலைப்பதிவைப் பயன்படுத்தி இந்த விஷயத்தில் சரியான நேரத்தில் அறிவைப் பெறலாம்..

## இலங்கையில் புலமைச் கொத்து மற்றும் பதிப்புரிமைச் சட்டம் - இணைய வழிக்கருத்தரங்கு








இலங்கை நூலகச் சங்கத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் குழுவின் உப குழுவினால், "எண்ணிம காலத்தில் இலங்கையின் புலமைச் கொத்து மற்றும் பதிப்புரிமைச் சட்டம் : நூலகப் புலமைசார்ந்தோர் நோக்கு" எனும் தலைப்பில் இணையவழிக் கருத்தரங்கு ஒன்று மே மாதம் 19ந்திகதி நடாத்தப்பட்டது. இதற்கு வளவாளர்களாக திரு சாணக்கிய ஜயதேவ, வழக்கறிஞர், பொழுது போக்கு, புலைமைச் சொத்து, தொழில்நுட்பம், ஒப்பந்தம், ஊடகம், விளையாட்டு மற்றும் வர்த்தகச் சட்டம் மற்றும் திருமதி கீதாஞ்சலி ரணவக்கஈ பணிப்பாளர், இலங்கை தேசிய புலமைச் சொத்து ஆகியோர் பங்குபற்றினர். சபை உறுப்பினர் உட்பட நூலக புலமையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் 41 பேர் இதில் பங்குபற்றினர்.

## உள்ளே

அரசு நூலகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டித்தேர்வு 2021 – நிகழ்நிலைக் கருத்தரங்கு தொடர் 01
இலங்கையில் புலமைச் கொத்து மற்றும் பதிப்புரிமைச் சட்டம் - இணையவழிக் கருத்தரங்கு 01
இலங்கை நூலகச் சங்க GATEWAY 02
நிகழ்நிலைப் பயிற்சி : "Google workspace for Library Office" work" 02
இலங்கை நூலகச் சங்க கல்விக் குழுவினால் நடாத்தப்பட்ட இணைய வழிக் கருத்தரங்குகள் 02
உலக புத்தக தினம் மற்றும் பதிப்புரிமை தினம் : சுன்னாகம் பொது நூலகம் 03
பயிற்சிப்பட்டறை – திறமையான தொடர்பாடலாளராக இரு 03
ஹோமாகம பிரதேச சபை நூலகத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கான புதிய வேலைத் திட்டங்கள் 03
இலங்கை நூலகச் சங்க அங்கத்துவத்தின் மீள்வருகை 04
நூலக பயிற்சி நிகழ்வு - கிளிநொச்சி 05
இலங்கை நூலகச் சங்க வெளியீட்டுக் குழு 2020/2021 05
"ப்ரதிருவா" அறுபதாவது ஆண்டு ஞாபகார்த் வெளியீடு 05

*Sri Lanka Library Association, Organization of Professional Associations, Sri Lanka, 275/75, Stanly Wijesundara Mawatha, Colombo 07, Sri Lanka, Tel/Fax: +94-11-2589103, Email:info@slla.lk*




இலங்கை நூலகச் சங்கத்தின் (2020/21) ற்கான கல்விசார் நூலகங்களின் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வலைத்தள வளங்களிற்கான தகுந்த பயனுள்ள அணுகலை ஒரு இடைமுகத்தினூடாக வளங்குவதற்காக இவ்வளங்களிற்கான portal ஆக SLLA Gateway ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தற்போதைய நாட்களில் ஒள்ள கோவிட் 19 நோய்ப்பரம்பல் காரணமாக நூலகங்களிற்கான நேரடி அணுகல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பெரும்பாலான நடவடிக்கைகள் நிகழ்நிலையினூடாகவே நடாத்தப்படுகின்றன். நிகழ்நிலையினூடாக நம்பத்தகுந்த தகவலை அணுகுதல் என்பது ஒவ்வொருவரிற்கும் சவாலாகவே உள்ளது. எனவே இந்த SLLA Gateway ஆனது அங்கீகரிக்கப்பட்ட வலைத்தள தகவல்களிற்கான இணைப்பை வழங்குவதன் மூலம் தகவல் தேடும் அனைவருக்கும் விசேடமாக நூலகர்களுக்கு தகவலை பெறுவதில் மிகவும் பயனுள்ளதாக அமையும். இலந்கை நூலகச் சங்கத்தின் கல்சிசார் நூலகர்களின் குழு இவ்வளங்களிற்கான Gateway ஐ COMAISP திட்டத்தின் கீழ் உருவாக்கி உள்ளது. இந்த Gateway ஐ www.gateway.slla.lk எனும் முகவரியில் அணுகலாம்.

## நிகழ்நிலைப் பயிற்சி : "Google workspace for Library Office" work"

இலங்கை நூலகச் சங்க (2020/21) கல்விசார் நூலகர் குழுவினால் மேற்படி தலைப்பிலான நிகழ்நிலைப் பயிற்சி ஒன்று பல்கலைக்கழக, பொதுசன மற்றும் ஏனைய நூலகர்களிற்காக 06.05.2021ல் ஒழுங்குபடுத்தப்பட்டது. தற்போதுள்ள கோவிட் 19 நோய்ப்பரம்பல் காரணமாக, நூலகர்களின் நிகழ்நிலை வேலைக் கலாசாரத்தின் அவசியத்தையும் தேவையையும் மற்றும் Google products ஐ பயன்படுத்தும் நிகழ்நிலை வேலைச் சூழலையும் இலங்கை நூலகச் சங்க கல்விசார் நூலகங்களின் குழு நன்கு அனுபவ ரீதியாக அறிந்துள்ளது. இப்பயிற்சி நெறியானது இலவசமாக நிகழ்நிலையில் தனித்தனியாக சிங்கள, தமிழ் மொழி மூலம் நடாத்தப்பட்டது. தமிழ் மொழி மூல வளவாளராக திரு எம். ஏன் . ரவிக்குமார், சிரேஷ்ட உதவி நூலகர் கிழக்குப் பல்கலைக்கழகம் அவர்களும் சிங்கள மொழி மூல வளவாளராக டீ.பீ.சீ. விதான , சிரேஷ்ட உதவி நூலகர் ஊவா வெல்லச பல்கலைக்கழகம் அவர்களும் பங்குபற்றினர். சிங்கள மொழி மூலத்திற்கு 134 பேரும், தமிழ் மொழி மூலத்திற்கு 95 பேரும் பங்குபற்றினர்.

## இலங்கை நூலகச் சங்க கல்விக் குழுவினால் நடாத்தப்பட்ட இணைய வழிக் கருத்தரங்குகள்

### நூல் விபரப் பட்டியல்களை எவ்வாறு தயாரிப்பது?

இலங்கை நூலகச் சங்க கல்விக் குழுவினால் நூல் விபரப் பட்டியல்களை எவ்வாறு தயாரிப்பது? எனும் தலைப்பிலான இணைய வழிக் கருத்தரங்கு ஒன்று மேற்பார்வையாளர்களுக்கும் உயர் டிப்புளோமாவில் நூல் விபரப் பட்டியல்கள் மற்றும் சுட்டிகளை திருத்தும் பரீட்சகர்களுக்குமாக 08.05.2021ல் நடாத்தப்பட்டது. இதன் பிரதான நோக்கமானத, விபரப் பட்டியல்கள் மற்றும் சுட்டிகளை மேற்பார்வை செய்வதில் ஏற்படக்கூடிய வழுக்களைக் குறைத்தல் ஆகும். இக்கருத்தரங்கு இ.நூ.ச. விரிவுரையாளர்கள் சகலருக்குமாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. திரு. கே. கே. ஜீ. விஜேவீர மற்ம் திருமதி அமரா நாணயக்கார ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்றினர். 23பேர் இக்கருத்தரங்கில பங்குபற்றினர்.

### டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமாக்களுக்கான பட்டியலாக்கம்

இலங்கை நூலகச் சங்க கல்விக் குழுவினால் விரிவுரையாளர்களுக்குப் பயிற்சி அளிக்குமுகமாக "டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமாக்களுக்கான பட்டியலாக்கம் : பட்டியலாக்கம் கற்பித்தலில் எவ்வாறு ஒரு ஒழுங்குமுறையைப் பேணுவது? எனும் தலைப்பில் இரண்டாவது இணைய வழிக்கருத்தரங்கு 25.05.2021ல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. மாணவர்களினால் தயாரிக்கப்படும் பட்டியலாக்கப்பதிவுகளில் ஏற்படக்கூடிய பிழைகளை சரியான முறையில் திருத்தம் செய்வதே இக்கருத்தரங்கின் நோக்கமாக இருந்தது. செல்வி க.கமலாம்பிகை இதன் வளவாளராகப் பங்குகொண்டார். 9 விரிவுரையாளர்கள் இதில் பங்குபற்றினர்

### டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமா -1 க்கான பகுப்பாக்கம்

இக்குழுவினால் 3வது இணைய வழிக்கருத்தரங்காக டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமாக்களுக்கான பகுப்பாக்கம்: பகுப்பாக்கம் கற்பித்தலில் எவ்வாறு ஒரு ஒழுங்குமுறையைப் பேணுவது எனும் தலைப்பில் 16.06.2021ல் நடாத்தப்பட்டது. இதன் பிரதான நோக்கமாக டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமா மாணவர்களுக்கு எவ்வாறு துணை அட்டவணைகள் பற்றிக் கற்பிப்பது, எவ்வாறு அவர்களுக்கு ஒப்படைகளை வழங்குவது, இப்பாடத்தில் பரீட்சை வினாக்களை தயாரிப்பதற்கு எவ்வாறு பரீட்சகர்களை நியமிப்பது போன்ற விடயங்களை அமைந்திருந்தன. இக்கலந்துரையாடல் கலாநிதி ஆர்டீ.ஆனந்த திஸ்ஸ மற்றும் கலாநிதி திருமதி. சுந்திரசேகர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் 15பேர் பங்குபற்றினர். இக்கற்கை நெறியில் உள்ள குறைகளை நிரப்புவதற்கு பயனுள்ள ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் – சுன்னாகம் பொது நூலகம்

உலக புத்தக தினம் மற்றும் பதிப்புரிமை தினம் என்பன சுன்னாகம் பொது நூலகத்தில் ஏப்ரல் 23ந் திகதி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நூலகரும் Book Abroad நிறுவன ஒருங்கிணைப்பாளருமான திரு என். செல்வராசா அவர்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட நூல்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. மதிப்புக்குரிய செயலாளர், மற்றும் வாசகர்கள் என ஏராளமானோர் பங்குபற்றினர்











## பயிற்சிப்பட்டறை - "திறமையான ஒரு தொடர்பாடலாளராக இரு"

தொடர்பாடல் நிமித்தமாக பேசுதல் என்பது ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வில் நிதமும் நடைபெறும் ஒன்றாகும். நாம் அனைவரும் மற்றவர்களை ஊக்குவிக்கவும், அவர்களை சமாதானப்படுத்தவும் பேசும் நேரங்கள் உள்ளன. ஆனால் ஒருவர் சிறந்த முறையில் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டுமெனில், அவருக்கு சிறந்த தொடர்பாடல் போக்கு ஒன்று இருத்தல் வேண்டும்.

ஒரு சிறந்த தொடரபாடல் மேற்கொள்பவர் சிறந்த தலைவர் ஆவார். இந்த நோக்கத்துடன் இலங்கை நூலகச் சங்கமானது சபை உறுப்பினர்களுக்காக ஒரு பயிற்சி நிகழ்வை ஆனி 3ந் திகதி நடாத்தியது. இதன் வளவாளராக திருமதி. சிவந்தி வீரசிங்க , இளைப்பாறிய நூலகர் , இலங்கை வங்கி அவர்கள் பங்குபற்றினார். சகல சபை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்குபற்றினர்



## ஹோமாகம பிரதேச சபை நூலகத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கான புதிய வேலைத் திட்டங்கள்

ஹோமாகம பிரதேச சபையின் பொது நூலகத் தொகுதியை 2021 இல் அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேடமாக இதன் கீழ் நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் உதவியுடன் தகவல்களை மக்களுக்கு வழங்கும் நோக்கில் கொஹா மென்பொருளை நூலகத்தில் ஸ்தாபிப்பதற்காக 4 மில்லியன் அளவிலான நிதி என்பவற்றுடன் கணினி யந்திரம், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மில்லியன் 2.5 என்பன நூல்களை கொள்வனவு செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளுக்குப் புறம்பாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் நூலகத்தை புதுப்பித்தல் மற்றும் அடித்தள வசதிகள் என்பவற்றை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன.

விசேடமாக நாட்டில் நிலவுகின்ற கொரோனா தொற்று நோய் நிலைமைகளிலும் மக்களுக்குத் தேவையான கல்வி மற்றும் பொழுது போக்கு சார் தகவல்களை வழங்குவதற்காக பண்டாரநாயக்க பொது நூலகத்தில் ஒன்லைன் கற்றல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கும், மக்கள் வசிக்கும் இடங்களை அண்டியதாக wifi வலயங்களை ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் ஹோமாகம பிரதேச சபையின் கௌரவ தலைவர் திரு சம்பத் சமிந்த அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் பிரதேச சபையின் செயலாளர் திருமதி குமுதினி குணதிலக அவர்களின் ஆலோசனையின் படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஹோமாகம பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் கல்வி, சமூக மற்றும் கலாசார துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.





இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் நிலையம், அதன் தொடர்ச்சியான அபிவிருத்திட்ட நிகழ்வின் கீழ் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பொது நூலகங்களிலுள்ள நூலகர்கள் மற்றும் நூலகப் பொறுப்பாளர்களுக்கு ஒரு பயிற்சி நிகழ்வை ஏப்ரல் 6 -7 ந்திகதிகளில் நடாத்தியது. இதன் முக்கிய நோக்கம் என்னவெனில் ஈநுலகர்களைப் பயிற்றுவிப்பதாகும். நூலக முகாமைத்துவம் எனும் தலைப்பின் கீழ் பட்டியலாக்கம், பகுப்பாக்கம் மற்றும் நூலக முகாமைத்துவம் என்பன இதில் உள்ளடக்கப்பட்டன. இந்நிகழ்வானது கிளிநொச்சி ACLG காரியாலயத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் நிலைய பணிப்பாளர் திரு. டபிள்யு சுனில், உள்ளூர் அரச உதவி ஆணையாளர் திரு. எஸ் பீரபாகரன், உதவிப் பணிப்பாளர் திரு. திரு டபிள்யு. எம் அரவிந்த மற்றும் தேசிய நூலக வளவாளர்கள் சிலரும் பங்கு பற்றினர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து 28 பேர் பங்குபற்றினர். இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் நிலையம் இம்மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு நூலகங்களுக்கும் தலா ரூபா 15000 பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தனர். இந்நிகழ்விற்கு சமமாக ஏப்ரல் 8-9 ந் திகதிகளில் மாவட்டங்களின் சகல நூலகங்களுக்கும் இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் நிலைய உத்தியோகத்தினர், நூலக தரமாக்கலுக்குத் தேவையான தகவல்களைப் பெறும் பொருட்டு வருகை தந்தனர்.


## SLLA Publication Committee 2020/2021

### Main Committee

Mrs.T.Sritharan (Publication Officer) Mrs.Chandima Wadasinghe

Mrs.K.Murugathas Mr.B.N.G.S. Premaratne

Mr.M.S.M. Shiham Mrs.A.V.M.K. Ankumbura

Mrs.Pavithra Wijayawardane

Newsletter Sub -Committee


Mrs.T.Sritharan Mrs. Gayani Lasantha Perera

Mrs.K.Murugathas

Journal Sub -Committee

Mrs.T.Sritharan Mr.B.N.G.S. Premaratne

Chandima Wadasinghe Mr.S.Navaneethakrishnan


The "Prathirawa" special electronic commemorative volume was prepared to commemorate the 60th anniversary of the Sri Lanka Library Association and to promote the creative abilities of government librarians. This volume will be published on the official website of the Sri Lanka Library Association.

**If undelivered please return to:**

**To:**

Sri Lanka Library Association,
OPA Center,
275/75, Stanly Wijesundara Mawatha,
Colombo 07.



கலாநிதி சீ.என்.கே. அளகக்கோன்
கல்வி அலுவலர் - SLLA
சிரேஷ்ட உதவி நூலகர்
பேராதெனிய பல்கலைக்கழகம்

நூலகர்கள் மற்றும் தகவல் வல்லுனர்களுக்கான பயிற்சி, ஆதரவு வழங்கல், அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கல் போன்றவற்றின் மூலம் இத்துறையில் மிக உயர்ந்நத நிபுணத்துவத்தை அடைவதற்கு நூலகத்துறையில் இலங்கையில் உள்ள ஒரேயொரு நிறுவனம் இலங்கை நூலகச் சங்கம் ஆகும். இந்நிறுவனத்தில் அங்கத்துவராக இருப்பதன் மூலம் ஒருவர் இத்துறையில் மிக உயர்ந்நத நிலையை அடைய முடியும். அதாவது மிக உயர்ந்த அங்கத்துவமான துணை (Fellow) அங்கத்தவராக இருப்பதன் மூலம் இத்துறைக்கு சேவையாற்ற முடியும். ஒருவர் தன்னுடைய தொழில் நிபணத்துவத்தை அடைவதற்கு நோக்காகக் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களை இக்கட்டுரையானது ஆராய்கிறது. நூலகத் துறையில் உயர் டிப்புளோமா அல்லது உயர்தகைமைகளைப் பெற்றவர்கள் எவரும் இலங்கை நூலகச் சங்கத்தில் அங்கத்துவம் பெற முடியும். இலங்கை நூலகச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு இரண்டு முறைகள் உள்ளன. அவையாவன கூட்டிணைக்கப்பட்ட அங்கத்துவம் மற்றும் கூட்டிணைக்கப்படாத அங்கத்துவம். கூட்டிணைக்கப்படாத அங்கத்தவர்கள் என்பது நூலகத்துறையில் குறிப்பிட்ட தகைமையைப் பெற்று இதன் மூலம் இலங்கை நூலகச் சங்கத்தில் புதிதாக அங்கத்துவம் பெற்றவர்கள். இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. இங்கு பொது அங்கத்துவம் தேவைப்படுகிறது. கூட்டிணைக்கப்பட்ட அங்கத்துவம் என்பது நூலகச் சங்கத்தில் துணை (Associateship) அல்லது இணை(Fellowship) அங்கத்துவம் பெற்றவர்கள். அவர்களுக்கு வாக்குரிமை உள்ளதோடு நூலகச்சங்கத்தின் ஒரு நிபுணத்துவம் வாய்ந்த அங்கத்தவராக விளங்குவார். ஒரு கூட்டிணைக்கப்படாத அங்கத்தவர் துணை அங்கத்துவம் பெறுவதற்கு குறிப்பிட்ட நூலகத் துறையில் ஐந்து வருடங்கள் சேவையாற்றி இருப்பதோடு ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களாவது ஒரு தகுதி வாய்ந்த நூலகரின் மேற்பார்வையில் சேவையாற்றி இருக்க வேண்டும். அந்நூலகர் நூலகச் சங்கத்தின் பட்டய நூலகர் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட திகதி வரை தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொண்ட துணை அல்லது இணை அங்கத்துவத்தினர், பட்டய நூலகர் எனும் பதவியைப் பாவித்துக் கொள்ள முடியும். அவர்கள் ALA மற்றும் FLA எனும் பதவிக் குறிகளையும் பயன்படுத்த முடியும். ஐந்து வருடங்களிற்கு மேல் இக்குறிப்பிட்ட பாடத்துறைக்கு சேவை புரிந்த சிரேஷ்ட துணை அங்கத்துவத்தினர் இணை (Fellowship) அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி இணை தேர்வுக்கான கோட்பாடுகளில் குறிப்பிடும் அனைத்து சாதனைகளுக்குரிய ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரி நூலகத்துறைக:கு ஆற்றிய அர்ப்பணிப்புக்கள் மற்றும் சேவைகள் யாவும் பின்வரும் நான்கு தலைப்புக்களில் மதிப்பிடப்படும்.

1. நூலக மற்றும் தகவல் விஞ்ஞான வெளியீடுகள் (அச்சு/இலத்திரனியல்).
2. இலங்கை நூலகச் சங்க பிரதான அலுவலராக/குழு அங்கத்தவராக வழங்கிய சேவைகள்.
3. நூலக மற்றும் தகவல் விஞ்ஞான அபிவிருத்தியில் மனித வளங்களுக்கான பங்களிப்பு.
4. நூலக மற்றும் தகவல் விஞ்ஞான ஆய்வு மற்றும் கண்டு பிடிப்புக்கள்.

கூட்டிணைக்கப்பட்ட அங்கத்தவர் அதாவது விண்ணப்பதாரி மேற்கூறிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய சேவைகளையும் அர்ப்பணிப்புக்களையும் நிரூபிக்க முடியவில்லையெனில் இது ஒரு சவாலாகவே அமையும். விசேடமாக இலங்கை நூலகச் சங்க பிரதான அலுவலராகவோ அல்லது குழு அங்கத்தவராக சேர்வது என்பது மிகவும் கடினமான இலக்காகவே அமையும். ஏனெனில் பதவிகள் யாவும் வரையறுக்கப்பட்டவை. இதனால் இலங்கை நூலகச் சங்கம் ஆய்வு மூலம் இணை அங்கத்துவம் (Fellowship by Research) எனும் இன்னொரு வகையான அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த இணை அங்கத்துவம் என்பது இலங்கை நூலகச் சங்கத்தின் அதிஉயர் பதவியாக உள்ளதனால் குறிப்பிட்ட அளவு விண்ணப்பதாரிகளை அருக்குமிடத்து மட்டுமே இது கருத்திற் கொள்ளப்படும். இந்த வகையானது இலங்கை நூலகச் சங்கத்தில் பிரதான அல்லது வேறு வழிகளில் சந்தர்ப்பம் கிடையாதவர்கள் மற்றும் நூலக விஞ்ஞானத்திற்கு கணிசமான நேரத்தை மட்டுமே செலவிட முடிந்தவர்களுக்கு உதவியாக இருக்கும்.

மேலாக இலங்கை நூலகச் சங்கமானது, சகல வழிகளிலும் உறுப்பினர்களின் அங்கத்துவத்தை விருத்தி செய்து, நூலக விஞ்ஞானத்துறையின் ஏணிப்படிகளில் சென்று அதன் உச்ச நிலையை அடைவதற்கான சகல முயற்சிகளையும் செய்துள்ளது. இந்நாட்களில் இலங்கை நூலகச் சங்கமானது நூலக விஞ்ஞ்ரனக்கல்வியில் தனது 60வது ஆண்டு நிறைவை 2021இல் நிறைவு செய்கிறது. எனவே விருத்தி செய்யப்பட்ட மற்றும் தரம் நிறைந்த நிபுணத்துவத்தை அடைந்நத ஒவ்வொரு உறுப்பினரும் இலங்கை நூலகச் சங்கத்தின் அளப்பரிய சொத்தாகும்.

**உசாத்துணை:**

https://www.slla.lk/index.php/about-slla/membership